# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF IV ADDITIONAL JUDGE

Case No. **S.C.No. 35/2022** Date:18.09.2024

**<u>Deposition of Witness PW - 4 /LW5</u>**

| | |
|---|---|
| Name | : Mr. Murugesan |
| Father's Name | : Ganesan |
| Village | : Perambur |
| Taluk | : Chennai |
| Calling | : Garlander |
| Religion | : Hindu |
| Age | : 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 of the 18th day of September 2024

**<u>(Accused present)</u>**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் சுமார் 10 ஆண்டுகளுக்கு ராஜீவ்காந்தி நகர் பெரம்பூர் பகுதியில் குடியிருந்தேன். வாடகை வீடு. நம்பர் தெரியவில்லை. என் மனைவி பெயர் பிரமிளா. பவானி என்பது என் மகளுடைய பெயர் அல்ல. சாந்தி என்பவர் என்னுடைய சம்மந்தி அல்ல. ஆஜர் எதிரிகள் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு நான் குடியிருந்த வீட்டிற்கு அருகே வசித்து வந்தார்கள். சுந்தரி என் மனைவி அல்ல. என் மனைவியின் பெயர் பிரமிளா. என் மகளின் பெயர் பூங்கொடி. அவர் இறந்துவிட்டார். எங்கள் பகுதியைச் சேர்ந்த ஆடலரசு என்பவரைப்பற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் மீது என்ன வழக்கு

என்று தெரியாது. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் என் வீட்டு வாசலிற்கு முன்பாக ஒரு பிணம் கிடந்தது. ஒரே இரத்தமாக இருந்தது. ஐசிஎப் காவல் நிலைய போலீசார் வந்து இந்த பிணத்தை பற்றி தெரியுமா என்று கேட்டார்கள். நான் தெரியாது என்று சொல்லிவிட்டேன். என் பெயரை கேட்டு வாங்கினார். அதன்பின்னர் சம்மன் கொடுத்து தற்போது வரச்சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. பிணம் கிடந்த அன்று இரவு 10.00 மணியளவில் போலீசார் என்னை விசாரித்தார்.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரப்பட்டு, அது பரிசீலனைக்கு பின்னர் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)**

## <u>குறுக்கு விசாரணை:-(அரசு தரப்பில்)</u>

போலீசார் விசாரித்ததாகவும், அந்த விசாரணையில் இவ்வழக்கு சம்பவத்தை பார்வையிட்டதாகவும், ஆஜர் எதிரிகளும், இறந்துபோன ராஜ்குமார் மற்றும் வினோத்குமார் அவர்களும் சேர்ந்து கத்தியால் ஆடலரசு என்பவரை குத்தி கொன்றதாகவும், அதைப்பார்த்து நானும், என் மகளும், என் சம்மந்தியும் கூச்சல் போட்டதாகவும், எதிரிகள் ஓடிவிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பின்னர் எதிரிகளுக்குப் பயந்து உண்மையை மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted by the witness to be correct.

V PANDIARAJ Digitally signed by V PANDIARAJ Date: 2024.09.18 18:13:32 +0530

Dt.18.09.2024

IV Additional Sessions Judge.